SMALL BUSINESS ENTERPRISE CENTRE
www.brampton-business.com

33 Queen St. West, 1ம் மாடி, Brampton, ON L6Y 1L9
தொலைபேசி: 905-874-2650 தொலைநகல்: 905-874-2670

# உங்கள் வியாபாரத்தை ஒன்டேரியோவில் கூட்டிணைவாக்குதல்

**கூட்டிணைவாக்குவதற்கு பதிவுசெய்தல்**

ஒன்டேரியோவில் ஒரு வியாபாரத்தை கூட்டிணைவாக்குவதற்கு விரும்பும் வாடிக்கையாளர்களுக்கு நான்கு சேவை விநியோகத் தெரிவுகள் உள்ளன:

- Articles of Incorporation (கூட்டிணைப்பு ஆவணங்கள்) ஐ பின்வருமிடத்தில் நேராக சமர்ப்பியுங்கள். டொரொன்டோவில் Companies and Personal Property Security Branch Public Office of the Ministry of Government Services (அரசாங்க சேவைகள் அமைச்சின் நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட உடைமை பாதுகாப்புக் கிளை பொது அலுவலகம்) (MGS): 375 University Avenue (யூனிவேர்ஸிட்டி சாலை), Ste 200 (தொகுதி 200) – (416) 314-8880.
- Articles of Incorporation (கூட்டிணைப்பு ஆவணங்கள்) ஐ தபால் மூலம் சமர்ப்பியுங்கள். Companies and Personal Property Security Branch Public Office of the Ministry of Government Services (அரசாங்க சேவைகள் அமைச்சின் நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட உடைமை பாதுகாப்புக் கிளை பொது அலுவலகம்) (MGS): Suite 200 (தொகுதி 200): 393 University Avenue (யூனிவேர்ஸிட்டி சாலை), Toronto (டொரொன்டோ), ON, M5G 2M2.
  - கூட்டிணைப்பு ஆவணங்களை ஏற்கும் 15 ஏனைய Service Ontario (சேவை ஒன்டேரியோ) அமைவிடங்கள்: http://www.ontario.ca/ontprodconsume/groups/content/@gopsp/@so/@bus/@companies/documents/document/stel02_168162.pdf
- அமைச்சுடன் ஒப்பந்தம் கொண்டுள்ள இரண்டு Service Providers (சேவை வழங்குபவர்கள்) இல் ஒன்று மூலம் இணையத்தினூடே Articles of Incorporation (கூட்டிணைப்பு ஆவணங்கள்) ஐ பதிவுசெய்யுங்கள்: http://www.cyberbahngroup.com/CyberbahnCMS/ அல்லது www.oncorp.com

- வழக்கறிஞர் அல்லது வேறு பயிற்சிபெற்ற தொழில்நெறிஞரின் சேவைகளைப் பெறுங்கள். ஒரு வியாபாரத்தை கூட்டிணைவாக்குதல் சட்டத்துவ மற்றும் நிதித்துவ விளைவுகளை கொண்டுள்ள ஒரு சிக்கலான செய்முறையாகும். ஒரு வழக்கறிஞர் அல்லது வேறு பயிற்சிபெற்ற தொழில்நெறிஞர் உங்களிற்காக எல்லா காகித வேலைப்பாடுகளையும் பதிவுசெய்வார். இவற்றில் ஒரு அத்தியாவசியமான NUANS பெயர்த் தேடலும், மற்றும் தேவையான அனைத்து கூட்டிணைப்பு ஆவணங்களும் உள்ளடங்கும். நீங்கள் அனைத்து பத்திரங்களையும் பெறுவீர்கள், உதா. கூட்டாண்மைக்குரிய முத்திரை, நடவடிக்கைக் குறிப்பு புத்தகம் மற்றும் அறிவுரை. இந்த நெறிஞர்களில் ஒருவரின் சேவைகள் உங்களுக்கு தேவைப்படின் எங்கள் பணியாளர்களில் ஒருவரைக் கேளுங்கள்.

**காகிதப் பத்திரங்களை நேர்முகமாக உபயோகித்தல் அல்லது தபால் மூலம் சமர்ப்பித்தல்**

நீங்கள் காகிதப் பத்திரங்களின் மூலம் கூட்டிணைவாக்கம் செய்வதெனின் பின்வருவனவற்றை பதிவுசெய்தல் அவசியமாகும்:

- Articles of Incorporation (கூட்டிணைப்பு ஆவணங்கள்) இன் பூர்த்திசெய்யப்பட்ட இரண்டு பிரதிகள். இரு பிரதிகளும் மெய்ம்மூலமான கையொப்பங்களை கொண்டிருத்தல் வேண்டும். **அனைத்து வியாபார நிறுவனங்களும் பங்குகளை கொண்டிருத்தல் வேண்டும் என்பதை தயவுசெய்து குறித்துக்கொள்ளுங்கள்.** பத்திரங்களின் ஆவணம் 6 பூர்த்திசெய்யப்படுதல் அவசியம் (1 பங்குரிமையாளர் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாகும்). பத்திரங்கள், சட்ட எழுதுபொருட்கள் கடைகள் அல்லது பெயர்த் தேடல் வீடுகளிலிருந்து அல்லது பின்வரும் இணையதளத்திலிருந்து பெறப்படக்கூடும். http://www.forms.ssb.gov.on.ca/mbs/ssb/forms/ssbforms.nsf
- மூலப்பிரதி Ontario-based Newly Upgraded Automated Name Search (NUANS) (ஒன்டேரியோவிலமைந்த புதிதாக தரமேற்றப்பட்ட தன்னியக்கமுடைய பெயர் தேடல்) அறிக்கை - இலக்கமுடைய நிறுவனத்தை கூட்டிணைவாக்குவதெனின் தேவையற்றது. இணையதளத்தினூடே பெயர்த் தேடல்: www.nuans.com. தயவுசெய்து கவனிக்கவும்: Companies and Personal Property Security Branch (நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட உடைமை பாதுகாப்புக் கிளை) ஆனது இந்த தேடற்சேவையை வழங்குவதில்லை.
- நிறுவனத்தின் பெயர், முகவரி, மற்றும் தொலைபேசி இலக்கத் தொடர்பு என்பனவற்றை அடையாளப்படுத்தும் ஒரு மேலுறைக் கடிதம்
- Minister of Finance (நிதி அமைச்சர்) இற்கு செலுத்தத்தக்க $360 கட்டணம் (GST அற்றது). கட்டணங்கள் சான்றிடப்பட்ட காசோலை, பண அஞ்சல், அல்லது சுய காசோலையினால் செலுத்தப்படலாம்.

சுய காசோலைகள் அச்சிடப்பட்ட பெயர், முகவரி, வங்கியின் இலக்கம், மற்றும் கணக்கு இலக்கம் என்பவற்றை உள்ளடக்குதல் அவசியம். பணம், VISA (வீசா), MasterCard (மாஸ்டர்காற்), AMEX, மற்றும் Interac (இன்டரக்) மூலம் நேர்முகமாகவும் கட்டணம் செலுத்தப்படலாம்.

- வேறு ஆதரவளிக்கும் ஆவணங்கள், தேவைப்பட்டதெனின்.
  **தயவுசெய்து கவனிக்கவும்**: இனிமேல், Consent to Act as First Director (முதன்மையான இயக்குநராக இயங்குவதற்கான உடன்பாடு), Branch (கிளை) உடன் பதிவுசெய்யப்பட தேவையில்லை, ஆனால் நிறுவனத்தின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் வைக்கப்படவேண்டும். Business Incorporation (வியாபார கூட்டிணைவாக்குதல்) படிவங்கள், சட்ட எழுதுபொருட்கள் கடைகள் அல்லது பெயர்த் தேடல் வீடுகளிலிருந்து பெறலாம்; அல்லது Company Forms (நிறுவன படிவங்கள்) இணையதளத்திலிருந்து கீழிறக்கம் செய்யலாம்: http://www.forms.ssb.gov.on.ca/mbs/ssb/forms/ssbforms.nsf/FormDetail?OpenForm&ACT=RDR&TAB=PROFILE&ENV=WWE&NO=007-07117
- தேவைப்படுவனவற்றைப் பற்றிய மேலதிக தகவல்களிற்கு சந்தியுங்கள்: http://www.ontario.ca/en/business/STEL02_163189 மற்றும் www.canadabusiness.ca இற்கு சென்று "incorporation" ஐத் தேடுங்கள்.

**Business Corporations Act (வியாபார நிறுவனங்கள் சட்டம்):**
பின்வரும் சேவைகளிற்கு, தபால் மூலமான CPPSB விசாரணையிற்கு தயவுசெய்து 2-4 வார அவகாசம் கொடுங்கள்::

- உடனடியான நேரடிச் சேவை அல்லது தபால் சேவையிற்கு $360
- Service Providers (சேவை வழங்குபவர்கள்) கீழேயுள்ள "இணையதளம் மூலம் பதிவுசெய்தல்" இனூடே உடனடியான சேவையிற்கு $300 (+சேவை வழங்குபவர்களின் கட்டணம்)
- மூன்றிற்கு மேற்பட்ட ஒவ்வொரு பரிவர்த்தனையிற்கும், பதிவுசெய்தல் கட்டணத்திற்கு மேல் ஒரு $25 பன்மடங்கான பரிவர்த்தனைச் சிறப்பு சேவைக் கட்டணம் உள்ளது. இது மூன்றிற்கு மேற்பட்ட Business Corporation Act (வியாபார நிறுவனச் சட்டம்) ஆவணங்களை பதிவுசெய்யும்போதாகும். இச்சேவை சந்திப்பின் மூலம் மட்டுமே.

**இலக்கப்படுத்தப்பட்டுள்ள நிறுவனம்**
ஒரு விண்ணப்பதாரர் இலக்கப் பெயருடன் பதிவுசெய்ய விரும்பினால், பெயர் தேடல் தேவையற்றது. Companies and Personal Property Security Branch (நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட உடைமை பாதுகாப்புக் கிளை) ஒரு இலக்கத்தை ஒதுக்கிக்கொடுக்கும். படிவங்களை பூர்த்திசெய்யும்பொழுது 9

வெற்று பெட்டிகளை (இலக்கத்திற்கு) விட்டு அதன்பின் “ONTARIO” என்ற சொல்லும் ஒரு சட்டக் குறியீடும் போடவும்.

**இணையத்தினூடே பதிவுசெய்தல்**

இணையத்தினூடே பதிவுசெய்வதெனின், நீங்கள் பின்வருவனவற்றை செய்வது அவசியமாகும்:

- முதன்மையான இணையதள சேவை வழங்கிகள் ஒன்றின் சேவைகளை பாவித்தல்
- **Cyberbahn** http://www.cyberbahngroup.com/CyberbahnCMS/
- 416-595-9522 அல்லது 1-800-806-0003 அல்லது
- **OnCorp Direct Inc** http://www.oncorp.com/home/incorporation.asp
- 416-964-2677 அல்லது 1-800-461-7772
- **அனைத்து வியாபார நிறுவனங்களும் பங்குகளை கொண்டிருத்தல் வேண்டும் என்பதை தயவுசெய்து குறித்துக்கொள்ளுங்கள்.** ஆகவே பத்திரங்களின் ஆவணம் 6 பூர்த்திசெய்யப்படுதல் அவசியம்.
- ஒன்டேரியோ-ஆதாரத்திலான NUANS பெயர் தேடலை பெற்று, தேடப்பட்ட பெயர், NUANS முன்பதிவு ஆதார இலக்கம், மற்றும் NUANS திகதி என்பனவற்றை வழங்குங்கள் www.nuans.com
- இணையத்திலுள்ள மேலுறைக் கடிதத்தை பூர்த்திசெய்யுங்கள். இதில் தொடர்பு நபர் ஒருவரின் பெயர், முகவரி, மற்றும் தொலைபேசி இலக்கத் தொடர்பு என்பனவற்றை அடையாளப்படுத்துங்கள்;
- $300 சட்டப்படியான கட்டணமொன்றை செலுத்துங்கள். இத்துடன், ஒவ்வொரு முதன்மையான இணையதள சேவை வழங்கியும் அதன் சேவைகளிற்கு ஒரு கட்டணத்தை விதிக்கின்றது. (க்ரெடிட் காற் மூலம் அல்லது முதன்மையான இணையதள சேவை வழங்கியுடன் ஒரு கணக்கை திறப்பதன் மூலம் கட்டணம் செலுத்தப்படலாம்).

**கூட்டரசைச்சார்ந்த கூட்டிணைவாக்கல்:** இணையத்தில் www.strategis.gc.ca/corporations

கூட்டரசைச்சார்ந்த எதிர் மாநிலத்தைச்சார்ந்த கூட்டிணைவாக்கலைப்பற்றி மேலதிக தகவல்களைப் பெறுங்கள்: http://www.incorper.com/FedvsOnt.html.